**8.8.2025**

பெயர் - கிருஸ்ணன் **(D.W.2)**

**(** துவங்கப்படும் நேரம் **- 11.55 AM)**

**(**முடிக்கப்பட்ட நேரம் **- 12.05 PM)**

**O.S. No.201/2017**

**10** முதல் **13** வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை **:-**

நான் இந்த வழக்கில் 2 வது பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தானது மரியா கவுடரின் சொத்து என்று சொன்னால் சரிதான். மரியா கவுடருக்கு 7 வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரியல்ல. மூடர்லி கவுடர், திம்மே கவுடர், உட்சி கவுடர் ஆகியோர்கள் மட்டுமே அவரின் வாரிசுகள் ஆவார்கள். கெம்பம்மாள், உட்சம்மாள், காடம்மாள், சன்னம்மாள் ஆகியோர்கள் யாருடைய வாரிசுகள் என்றால் அவர்கள் மரியா கவுடரின் வாரிசுகள் ஆவார்கள். ஆனால், அவர்கள் இறந்து விட்டார்கள். தாவா சொத்தானது மரியா கவுடரின் சுயசம்பாத்தியத்தில் வாங்கிய சொத்து என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குறையில் 24.11.1972 ல் ஒரு உயில் எழுதப்பட்டதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நாளது தேதிவரை அந்த உயிலின் அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.